**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 127/2020**

**PW5**

| | | |
|---|---|---|
| Name | : | பாண்டியன் |
| Father's/Husband's Name | : | சிங்காரவேலன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.01.2025.

A1 to 7 present.

**முதல் விசாரணை**

நான் செல்லங்குப்பம் கிராமத்தில் குடியிருக்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சிவாவை என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். நான் சம்பவம் நடந்தபோது பெங்களூர் சென்றிருந்தேன். சிவா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் 04.12.2017 ம் தேதி காலை முதல் சிவாவுடன் ஒன்றாக இருந்தேன் என்றும், சிவா மாண்டியாவில் உள்ள குப்பம்மாள் என்பவரிடம் கொடுத்து வைத்த பணத்தை கேட்டபோது மாலை சுமார் 04.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பணம் தருவதாக சொன்னதாகவும், 04.30 மணியளவில்

நானும், சிவாவும் குப்பம்மாள் வீட்டிற்கு போவதற்கு சிவா எனக்கு முன்னால் போனார் என்றும், அவருக்கு பின்னால் குப்பம்மாள் வீட்டிற்கு போனேன் என்றும், நான் போய் பார்த்தபோது ஜனங்கள் அங்கே கும்பலாக இருந்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் குப்பம்மாள் , ஜெயராமன் ஆகியோர் சிவாவை பார்த்து அசிங்கமாக திட்டி "வெட்டித்தள்ளுங்கடா "என்று சொன்னதாகவும், நான் பயந்து குளத்துக்கரையில் இருந்து பார்த்தபோது சிவாவை எதிரிகள் குப்பம்மாள், அவரின் மருமகள் லதா, காளி, ஜெயராமன், கார்த்தி , துரை , குமரவேல் ஆகியோர் ஒன்று சேர்ந்து கத்தியால் சிவாவின் மார்பில் குத்தி தலையை வெட்டியும், சிவாவின் கழுத்தை அறுத்தும், சிவாவின் உடலை அவரது மாமனார் சண்முகம் வீட்டிற்கு எடுத்து சென்றதாகவும், அங்கு சிவாவின் உடம்பின் மீது தீ வைத்து எரித்தார்கள் என்றும், நான் பயந்து கொண்டு அங்கிருந்து என் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், சிவாவின் உறவினர் யாரும் வராததால் சிவாவின் மனையிவிடம் மறுநாள் தகவல் தெரிவித்தேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.